Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 520/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | சமையல் மாஸ்டர் |
| பெயர். | - | ஏழுமலை | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | சண்முகம் | சமயம் | - | |
| கிராமம் | - | கிராமம் | வயது | - | 57 |

12.11.2025

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜரில்லை.

முதல் விசாரணை.

1. 1. நான் தற்போது கிராமம் என்ற கிராமத்தில் வசித்து சமையல் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மதியம் 12.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையொப்பம் செய்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. **பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 04.10.2021 ம் தேதி காலை 10.15 மணியளவில் போலீசார் சண்டை வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள் என்றாலும், அவர்கள் விசாரணைக்கு நான் சாட்சியாக இருந்து அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பமிட்டேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -</u>**

எழுதப்படாத வெள்ளை தாளில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். என்ன சம்பவம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் தெரியாது.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 520/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | தலைமை காவலர் 2264 |
| பெயர். | - | செங்கல்வராயன் | வட்டம் | - | விக்கிரவாண்டி |
| த/பெ. | | தட்சணாமூர்த்தி | சமயம் | - | |
| கிராமம் | - | விக்கிரவாண்டி | வயது | - | 41 |

12.11.2025

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜரில்லை.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் தலைமை காவலர் 2264 -ஆக பணியாற்றி வருகிறேன். அ.சா.1-ஐ தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 04.10.2021 ந் தேதி நான் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் முதல்நிலை காலவராக பணியில் இருந்தபோது காலை சுமார் 09.00 மணியளவில் அ.சா.1 காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சாராயமேடு கிராமத்து அருகே உள்ள இளங்கோ நிலம் அருகே விபத்து ஏற்பட்டதாகவும், அங்கு பிரச்சனை ஏற்பட்டதால் அங்கிருந்தவர்கள் தன்னை அசிங்கமாக பேசி அடித்து விட்டதாக உதவி ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தார்.

2. உடனே உதவி ஆய்வாளரின் உத்தரவின் பேரில் நானும், காவலர் ஞானசேகரனும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு அசா.1-ம், எதிரிகளும் நின்றிருந்தார்கள். அப்போது எதிரிகள் அ.சா.1-ஐ பார்த்து தெவுடியா பையா , இன்னும் நீ இங்கிருந்து போகலயா நீ என அசிங்கமாக பேசினார்கள். அப்போது நான் அ.சா.1-ஐ விசாரித்த போது PY01 என்ற Suzuki Access இருசக்கர வாகனம் நடந்து சென்றவர் மீது மோதியதாகவும், மோதிய இருசக்கர வாகனத்தின் சாவியை அ.சா1 எடுத்த போது எதிரிகள் அ.சா.1-டம் பிரச்சனை செய்து அந்த சாவியை பிடுங்கி கொண்டதாகவும் தெரிவித்தார்கள்.

3. எதிரி கார்த்திக் தன்னை கையால் கன்னத்தில் அடித்ததாக அ.சா.1 என்னிடம் தெரிவித்தார். நாங்கள் போனவுடன் எதிரிகள் அமைதியாகிவிட்டார்கள். பின்பு அ.சா.1-ஐ காவல் நிலையத்திற்கு

அழைத்து வந்தோம். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளரிடம் தெரிவித்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இந்த வழக்கானது 2022 வருடத்திய வழக்குஎன்று எடுத்து கூறியும் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

# Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 520/2024

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | தலைமை காவலர் |
| பெயர். | - | ஞானசேகரன் | வட்டம் | - | விக்கிரவாண்டி |
| த/பெ. | | ராதாகிருஷ்ணன் | சமயம் | - | |
| கிராமம் | - | கெடார் | வயது | - | 45 |

12.11.2025

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜரில்லை.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது கெடார் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1-ஐ தெரியும். எதிரிகளை தெரியும். கடந்த 04.10.2021 ந் தேதி நான் திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காலவராக பணியில் இருந்தபோது காலை சுமார் 09.00 மணியளவில் அ.சா.1 காவல் நிலையத்திற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சாராயமேடு கிராமத்து அருகே உள்ள இளங்கோ நிலம் அருகே விபத்து ஏற்பட்டதாகவும், அங்கு பிரச்சனை ஏற்பட்டதால் அங்கிருந்தவர்கள் தன்னுடைய இருசக்கர வாகனத்தின் சாவியை பிடுங்கி வைத்திருப்பதாகவும், மேலும் தன்னை அடித்ததாக உதவி ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்தார்.

2. உடனே உதவி ஆய்வாளரின் உத்தரவின் பேரில் நானும், காவலர் செங்கல்வராயனும் சம்பவ இடத்திற்கு சென்றோம். பின்பு அசா.1-ஐ காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம். அப்போது அ.சா.1 எதிரிகள் தன்னை அடித்ததாகவும், தெவுடியா பையா போலீஸ் னா பெரிய இதுவா என அசிங்கமாக பேசியதாகவும் கூறினார். பின்பு அ.சா.1-ஐ காவல் நிலையம் அழைத்து வந்து இது சம்மந்தமாக உதவி ஆய்வாளரிடம் தெரிவித்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். இந்த வழக்கானது 2022 வருடத்திய வழக்குஎன்று எடுத்து கூறியும் போதுமான வாய்ப்பு கொடுத்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**(Sd/-R.Senthilkumar)**
**D.M-cum-JM,**
**T.V.Nallur.**